செ.வெ.எண்: 55/ மே /2020 நாள்: 20.05.2020

**சூரிய சக்தியால் இயங்கும் சூரிய ஒளி மின்வேலி அமைக்க விண்ணப்பங்கள் வரவேற்கபடுகிறது மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.சிவராசு, இ.ஆ.ப., தகவல்.**

-----

திருச்சி மாவட்டத்தில் சூரிய சக்தியால் இயங்கும் சூரியஒளி மின்வேலி இவ்வாண்டில் அமைக்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என திருச்சி **மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.சிவராசு அவர்கள்** தகவல் தெரிவித்துள்ளார்கள்.

தமிழகத்தில் தனிநபர் விவசாயிகளுக்கு விவசாய உற்பத்தியை பாதிக்காத வண்ணமும் விளைபொருட்களின் மூலமாக கிடைக்கும் வருவாயை பெருக்கிடும் நோக்கத்துடனும் சூரிய சக்தியால் இயங்கும் சூரியஒளி மின்வேலியினை 50% மானியத்துடன் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் 2020-21ம் நிதியாண்டில் வேளா்ணமை பொறியியல் துறை மூலம் செயல்படுத்திட 24.03.2020 அன்று நடைபெற்ற சட்டசபை அறிவிப்பில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. சூரியஒளி மின்வேலி அமைப்பானது சூரியஒளி மின் தகடுகள் மூலம் கிடைக்கும் மின்சாரத்தினால் இயங்கக் கூடியது. சூரியஒளி மின்வேலி அமைப்பதனால் விலங்குகள், வேட்டைக்காரர்கள் மற்றும் அன்னியர்களுக்கு மின் வேலியில் செலுத்தப்படும் உயர்மின் அழுத்தத்துடன் கூடிய குறுகிய உந்துவிசை மின் அதிர்ச்சியினால் அசௌகரியம் ஏற்பட்டு விளைபொருட்களின் உற்பத்தி பாதிக்கப்படாமலும் அதன் மூலம் கிடைக்கும் வருவாய் இழப்பில்லாமலும் விவசாயிகளுக்கு கிடைத்திட வகை செய்யும். விவசாயிகள் தங்கள் பகுதிக்கு ஏற்றவாறு மின்வேலியினை 5 வரிசை (ரூ.250/மீ ) 7 வரிசை (ரூ.350/மீ)அல்லது 10 வரிசை (ரூ.450/மீ) அமைப்பினை தெரிவு செய்து கொள்ளலாம் . தனிநபர் விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கர் அல்லது 1245 மீட்டர் மின்வேலி அமைக்க மானியம் வழங்கப்படும். மேலும் சூரியஒளி மின்வேலி அமைப்பிற்கான செலவுத் தொகையில் 50% அல்லது அதிகபட்சமாக ரூ. 2.18 இலட்சம் மானியம் வழங்கிட பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு அனைத்து மாவட்ட விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப நிதி ஒதுக்கீடு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்வதால் இத்திட்டத்தில் பயன்பெற விருப்பமுள்ள அந்தந்த பகுதியிலுள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் கீழ்க்கண்ட வேளாண்மைப் பொறியியல் உபகோட்டங்களில்

1. **உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, எண் 2, ஜெயில் கார்னர், திருச்சி-620 020**
   அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், மணப்பாறை, வையம்பட்டி மற்றும் மருங்காபுரி ஊராட்சி ஒன்றிய பகுதிகளிலுள்ள விவசாயிகள்

2. **உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, 18 H/1A கண்ணதாசன் தெரு, முசிறி-621 211.** முசிறி, தொட்டியம், தாத்தையங்கார்பேட்டை, துறையூர் மற்றும் உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளிலுள்ள விவசாயிகள்

3. **உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, கணபதி நகர், வடக்கு விஸ்தரிப்பு . தாளக்குடி அஞ்சல், இலால்குடி-621 216** இலால்குடி, புள்ளம்பாடி மற்றும் மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளிலுள்ள விவசாயிகள்

தங்களது பெயரினை பதிவு செய்து மூதுரிமை அடிப்படையில் பெற்று பயன் அடையுமாறு **திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு. சிவராசு, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**